[8th March 1968

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Mr. Chairman, Sir, we hear that the Andhra Government are claiming a portion of the energy produced at Neyveli, because they consider it a Centrally sponsored scheme. Why not let them take that power, which is much more expensive than the Mysore power, so that we can buy power from the Mysore Government ? The power from Neyveli can be sold profitably to Andhra.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்கள் தரும் மின்சாரத்தை நாம் எப்போதும் நம்பிக்கொண்டேயிருக்கமுடியாது. அவர்கள் எந்தக் காலத்திலும் நினைத்தால் தடுத்து நிறுத்துவார்கள். அதனால் நமக்குக் கிடைக்காமலே போகக் கூடும். ஆகையால் தேவையான அளவு எடுத்துக்கொள்ளுகிறோம். ஒரு மிலியன் போதும். இதற்கு 5 காசு என்றும் அதற்கு மேல் 4½ காசு என்றும் பேசுகிறோம். எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமிருப்பதால், தேவையான அளவுக்கு எடுக்கலாம் என்ற நிலையிலிருக்கிறோம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : அமைச்சர் அவர்கள் நெய்வேலியிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம் பூராவும் இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கு நாமே எடுத்துக்கொள்ளவேண்டிய நிலையிலிருப்பதால் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். தினந்தோறும் மத்திய சர்க்கார் பெரிய தொழிற்சாலைகளை, ஹெவி இன்ஜினியரிங் கார்ப்பரேஷனைப் பற்றிச் செய்திகளை நாம் பார்க்கிறோம். அவை நஷ்டத்திற்கே ஒடுகிறவை போலத் தோன்றுகின்றன. சீக்கிரத்தில் இங்கே Auxill ary industries-களை ஆரம்பிக்கலாம். இப்போது லாபம் வருகிற சூழ்நிலை இல்லாததால் மைசூரில் 5 காசுக்கு ஒரு மிலியன் யூனிட் கிடைக்கும்போது நாம் ஏன் அதற்கு 7 காசுகள் கொடுக்கவேண்டும். அப்படியிருந்தால் அதை Subsidise செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு யோசனை சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்கள் 7 காசு கேட்கிறார்கள். நாம் 5·2 என்ற முறையில் பேசுகிறோம். அவர்களுக்கும் நமக்கும் கட்டுப்படியாகும் நடுத்தர நிலைமை வரவேண்டுமென்ற முறையில் தான் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. நீர் மின்சாரத்தைப் பார்த்தால் 1½, ¾ காசு தான் வரும். எல்லாவற்றையும் பார்த்து மொத்தத்தில்— கணக்குப் போடவேண்டும். மைசூரில் சாராவதி திட்டம் வந்ததால், மின்சாரம் அதிகமாக உற்பத்தியாகிறது. 4½ காசுக்கு கொடுப்பதற்கு இப்போது முன் வருகிறார்கள். இரண்டாண்டுகளுக்கு முன், ஒப்பந்தம் செய்ததால், நமக்கும் தேவை அதிகமாக இருந்தது. அப்போது 9 காசு அளவுக்கு கொடுக்கவேண்டியிருந்தது நாம். இப்போது நமக்கும் உற்பத்தி அதிகமாகி, அவர்களுக்கும் அதிகமாகி இருப்பதால், இன்னும் கொஞ்சம் குறைக்கலாமா என்று பார்க்கிறோம். 4 காசுக்கு ஆரம்பித்து 4½ காசு என்று இப்போது இருக்கிறது. மொத்தத்தில் எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து, சராசரி மட்டத்தில் நமக்கு கட்டுப்படியாகும் நிலையில் தான் அவை அமைக்கப்படும்.

Detention of train.

* 215 Q—THIRU N. R, THIAGARA7AN : Will the Hon. the Minister for Education and Industries be pleased state—

(a) whether the studente of the Annamalai University detained any train recently ;

(b) the reason therefor ; and

(c) whether the Government will address the Railway Board for changing the timings so as to enable the students to reach their college in time.

ரயிலை நிறுத்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்— :

(அ) அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்கள் அண்மையில் ரயிலை போக விடாமல் தடுத்து நிறுத்தினார்களா ?

(இ) என்ன காரணத்திற்காக நிறுத்தினார்கள் ?

(உ) அவர்களுக்கு கல்லூரிக்கு உரிய காலத்தில் செல்லும் வகையில் ரயில் நேரத்தை மாற்றியமைக்கும்படி ரயில்வே போர்டாருக்கு சர்க்கார் எழுதுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) புகைவண்டிகள், அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேராமையாலும் அடிக்கடி காலந் தாழ்த்தி ஓடிக்கொண்டிருந்தமையாலும் வெளியூர்களிலிருந்து வரும் பல மாணவர்கள் இரவு நேரங்களில் தங்கள் வீடுகளுக்குத் தாமதமாகத் திரும்ப வேண்டியிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் மாணவர்கள் புகை வண்டிகளை தடுத்துத் நிறுத்த முனைந்தனர்.

(உ) தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் ரயில்வே அதிகாரி களுக்கு இது குறித்து முன்னமே கடிதம் எழுதியுள்ளார். அதை ரயில்வே அதிகாரிகள் முனைந்து ஆலோசித்து வருகிறார்கள்.

Aided Secondary Schools for girls in Thanjavur town area.

*** 216 Q**—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether it is a fact that Seconday Grade Teachers in continuous service for over two years in Aided Seconday Schools for Girls in Thanjavur Town area have been kept with out payment of salaries from the beginning of the academic year 1967–68 ;

(b) if so, the number of such teachers ; and

(c) the reasons therefor ?

தஞ்சாவூர் நகரப் பகுதியிலுள்ள மானியம் பெறும் பெண்கள் இடைநிலை பள்ளிகள்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூர் நகரப் பகுதியிலுள்ள மானியம் பெறும் பெண்கள் இடைநிலைப் பள்ளிகளில் இரண்டு ஆண்டுகட்கு மேல் தொடர்ந்து பணி புரிகின்ற இடைநிலை ஆசிரியர்கள் 1967-68-ம் கல்வி ஆண்டின் ஆரம்பத் திலிருந்து ஊதியம் கொடுக்கப்படாமலிருக்கின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

THIRU G. KRISHNAMOORTHY : Is it a fact, Sir, that by calculating the teacher-pupil ratio as 1 : 55, certain secondary grade teachers in Thanjavur town were given notice ? Am I to understand that these notices have been withdrawn and their salaries paid ?